திஸ்ஸமஹாராம பிரதேச சபை - 2024

----

1. நிதிக் கூற்றுக்கள்

1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10(1) உபபிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, திஸ்ஸமஹாராம பிரதேச சபையின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான க ணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	பள்ளியவத்த பல்கரும கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டு 2019 ஆண்டில் சபைக்கு ஒப்படைக்கப்பட்ட போதிலும், அந்த கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட உண்மையான செலவினை மூலதனப்படுத்தாமல், ரூபா 300 மில்லியன் மொத்த பெறுமதி மதிப்பீட்டுத் தொகைக்கு காணிகள் கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.	உண்மையான செலவினை அறிவிக்கும் படி நகர அபிவிருத்தி அதிகாரசபையிடம் வேண்டிய போதிலும், அந்த தகவல்கள் கிடைக்கப் பெறவில்லை என.	நிர்மாணிக்கப்பட்ட கட்டிடங்களின் பெறுமதி கணக்குகளில் காட்டப்பட வேண்டும்.

(ஆ)	சபைக்கு சொந்தமான இருந்த பின்னர் வேறொரு அரச நிறுவனம் ஒன்றிற்கு உரித்தாக்கப்பட்ட ரூபா 1.11 மில்லியன் தொகைக்காக காணி மற்றும் கட்டிடங்களை கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், ரூபா 450,000 தொகைக்கு பெறுமதி மதிப்பீடு செய்திருந்த பஸ் நிலையத்திற்கு முன்பக்கமாக கடையறைகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	2025 ஆண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	அகற்றப்பட்ட மற்றும் கணக்கீடு செய்யப்படாத நடைமுறை அல்லாத சொத்துக்களை சரியாக கணக்கீடு செய்ய வேண்டும்.
(இ)	ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட ரூபா 790,592 இற்கான மூலதனச் செலவுகள், மூலதனப்படுத்தியிருக்கவில்லை.	2025 ஆண்டு சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நடைமுறை அல்லாத சொத்துக்கள் சரியாக மூலதனப்படுத்த வேண்டும்.
(ஈ)	சபையினால் பயன்படுத்தப்படுகின்ற கப் வண்டியை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.	எதிர் காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான வாகனங்களை பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(உ)	சபையின் 17 பிரிவுகளில் 225 விடயங்கள் தொடர்பாக தளபாட உபகரணங்களின் பெறுமதி, பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்திருக்கவில்லை.	பெறுமதி மதிப்பீடொன்று செய்வதற்காக குழுவொன்று நியமிக்கப்பட்டதுடன், பரிந்துரை கிடைத்த பின்னர் ஆவணப்படுத்தப்படும் என.	தளபாட உபகரணங்கள் பெறுமதி மதிப்பீடு செய்து கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஊ)	2020 ஆண்டின் போது இரண்டு உடல் உருவல் நிலையங்கள் நிறுவுவதற்காக சபைக்கு வழங்கியிருந்த ரூபா 1.85 மில்லியன் தொகைக்காக உடன்படிக்கை கையொப்பமிட்டு ஈடுபாட்டு பொறுப்பு ஏற்படுத்திக் கொண்டிருக்காத மீதிகளுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கியிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ஈடுபாட்டுப் பொறுப்பு ஏற்படுத்தியிருந்த அல்லது செலுத்த வேண்டியிருந்தவை என உறுதிப்படுத்திய பெறுமதிக்காக மாத்திரம் கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும்.
(எ)	ஆண்டிற்குரிய கூட்டுத்தொகை ரூபா 206,327 இற்கான 08 செலவு விடயங்களுக்காக கடன்கொடுத்தோர் ஏற்பாடு மேற்கொண்டிருக்கவில்லை.	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடன்கொடுத்தோர் மீதிகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும்.
(ஏ)	சபையின் இரண்டு சேமிப்புக் கணக்குகளில் ஆண்டிற்குரிய வட்டி ரூபா 2.07 தொகை எனினும், ரூபா 2.38	2025 ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	வட்டி சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும்.

மில்லியன் என ரூபா 305,752 தொகையினால் மிகையாக கணக்கீடு செய்யப்பட்டிந்தது.

1.6.2 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
அட்டவணைகள், காலப் பகுப்பாய்வுகள் மற்றும் மீதியை உறுதிப்படுத்தல்க சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 778,475 தொகைக்கான 04 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியவில்லை.	வழக்குத் தாக்கல் செய்வதற்கு போதியளவு சான்றுகள் காணப்படவில்லை எனவும், சில மீதிகளுக்காக தகவல்கள் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றனெதவும் மற்றும் காலப் பகுப்பாய்வு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனவும்.	நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணிக்கு மீதிகளை உறுதிப்படுத்துவதற்குரிய சான்றுகள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

1.7 இணங்காமை

1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு	இணங்காமைகள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134(2)	சபைக்குச் சொந்தமான வீதவரி எல்லையை விரிவாக்குவதற்காக 2013 மற்றும் 2018 ஆண்டுகளின் போது 10 கிராம சேவகர் பிரிவுகள் முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என இனங்கண்டிருந்த போதிலும், அதனை வெளியிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காமையால் சபையின் வருமானத்தை விரிவாக்கு சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.	பிரிவுகளை முன்னேற்றப்ப்ட்ட பிரதேசங்கள் என ஆக்குவதற்கு அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக உள்ளுராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது என.	முன்னேற்றப்பட்ட பிரதேசங்கள் என ஆக்கப்பட்டிருந்த 10 பிரிவுகளில் இருந்து வீதவரி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	1946 இன் 30 ஆம் இலக்க வரி மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்தல் வரி மற்றும் கட்டளைச் சட்டத்தின் பிரிவு 20	வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும், அதன்படி, செயற்படாமல், 2007 ஆண்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பெறுமதி மதிப்பீட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிலும், வீதவரி அறவீடு செய்யப்பட்டமையால், பெறுமதி மதிப்பீடு கால ரீதியாக செயற்படுத்தப்பட்டிருக்காத காலம் 13 வருடங்களாக காணப்பட்டது.	2012 ஆண்டு முதல் புதிய பெறுமதி மதிப்பீடு செய்து தரும் படி விலை மதிப்பீட்டுத் திணைக்களத்திடம் வேண்டியிருந்த போதிலும் இதுவரை பெறுமதி மதிப்பீடு வழங்கப்படவில்லை என.	வீதவரி ஆதனங்கள் குறிப்பிட்ட சட்டத்தின் பிரிவின் பிரகாரம் கால ரீதியாக பெறுமதி மதிப்பீடு மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.
(இ)	இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571(3)	இளைஞர் விவாகார மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சிலிருந்து 2020 திசெம்பர் 31 திகதி 02 உடன் உருவல் நிலையங்கள் நிறுவதற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1.85 மில்லியன் தொகை குறிப்பிட்ட கருமத்திற்காக பயன்படுத்தாமல் மற்றும் 2019 ஆண்டில் சபையினால் அறவிடப்பட்டிருந்த தேசத்தை கட்டியெழுப்பும் வரி ரூபா 42,320 தொகையினை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமல் முறையே 04 வருடங்களுக்கு மற்றும் 05 வருடங்களுக்கு மிகையான காலம் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	உடல் உருவல் நிலையத்திற்காக மதிப்பீடு தயாரித்து தேவையான தொடர் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	குறிப்பிட்ட நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் குறிப்பிட்ட கருமத்திற்காக வைப்புச் செய்யப்பட்ட பணம் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஈ)	2010 திசெம்பர் 27 திகதிய தபபா/பபாகோ/2010/01 இலக்கம் கொண்ட தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை			
	(i) பந்தி 04	கடையறைகளை வாடகைக்கு எடுத்த நாளில் அல்லது 06 மாதங்களுக்குள் உச்சமட்ட 06 தவணைகளில் ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்யப்பட	கடையறைகளை திறப்பதற்கு முன்னர் ஒரே தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை	சுற்றறிக்கையின் குறிப்பிட்ட பந்தியின் ஏற்பாடுகளின் படி கடையறைகளுக்காக அறவீடு செய்யப்படுகின்ற ஒரே

		வேண்டியிருந்த போதிலும், திஸ்ஸமஹாராம பல்கரும கட்டிடத்தின் 18 கடையறைகளுக்காக ரூபா 15.89 மில்லியன் தொகை ஒரே தடவையில் பெறும் பணம் குறிப்பிட்ட காலத்தில் அறவீடு செய்திருக்கவில்லை.	எடுக்கப்படும் என.	தடவையில் பெறும் பணம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
	(ii) பந்தி 05	அனைத்து உடன்படிக்கைகளும் 03 வருடங்களுக்கு ஒருமுறை நாளதுவரை ஆக்கப்பட வேணடிய போதிலும், சபைக்குச் சொந்தமான 17 கடையறைகள், 02 பகுதி நேர வியாபார நிலையங்கள் மற்றும் 03 லொத்தர் விற்பனை குடில்கள் தொடர்பாக உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை.	உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது எனவும் மற்றும் நாளதுவரை ஆக்க முடியாத உடன்படிக்கைகளை இரத்துச் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என.	சுற்றறிக்கையின் குறிப்பிட்ட பந்தியின் ஏற்பாடுகளின் படி கடையறைகளுக்காக உடன்படிக்கைகள் நாளதுவரையாக்கப்பட வேண்டும்.
(உ)	2018 இன் மார்ச் 19 திகதி 01/2018 இலக்கம் கொண்ட திறைச்சேரிச் செயலாளரின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை	நீண்ட காலம் முதல் பயன்படுத்தப்படாமல் ஓட்ட நிலையிலிருந்து அகற்றப்பட்டிருந்த 10 வாகனங்களை அப்புறப்படுத்துவதற்கு கணக்காய்வுத் திகதியாகிய 2024 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	அப்புறப்படுத்தல் குழுவின் அறிக்கை கிடைத்த பின்னர் பரிந்துரைகள் செயற்படுத்தப்படும் என.	செயற்படு நிலையில் காணப்படாத வாகனங்கள் தொடர்பாக குறிப்பிட்ட சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி செயற்பட வேண்டும்.

1.7.2 வரித் தேவைப்பாட்டுடன் இணக்கமின்மை

கணக்காய்வு அவதானிப்புக்கள்	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் ஆயுர்வேத நிலையத்தில் சேவையாற்றுகின்ற ஆயுர்வேத வைத்தியரின் 2022 ஜனவரி மாதம் முதல் மாதாந்த சம்பளம் ரூபா 100,000 தொகையை மிகைத்திருந்த போதிலும், Advanced Personal Income Tax (APIT) அறவீடு செய்து உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு மீளாய்வாண்டு இறுதியளவிலும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	உழைக்கும் போதே செலுத்தும் வரியினை அறவீடு செய்து உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என.	நிலவுகின்ற சட்ட விதிகளுக்கு இணங்க வரி வருமானம் அறவீடு செய்து அனுப்பப்பட வேண்டும்.

2. நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 33.58 மில்லியன் தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 22.11 மில்லியன் தொகையாக இருந்தது.

2.2 வருமான நிருவாகம்

2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையின் செயலாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

	2024				2023			
வருமான மூலம்	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை	மதிப்பீட்டு வருமானம்	சிட்டையிடப்பட்ட வருமானம்	சேகரிக்கப்பட்ட வருமானம்	திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை
	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா	ரூபா
வீதவரி மற்றும் வரி	3,335,849	3,247,301	2,465,958	4,059,169	3,072,086	3,397,609	4,135,145	3,906,792
வாடகை	17,406,401	14,485,522	12,910,403	68,444	16,694,830	13,701,423	18,337,271	3,931,896
அனுமதிப் பத்திரக் கட்டணம்	7,868,600	9,499,390	947,5297	132,830	5,597,192	9,764,727	10,135,007	545,870
ஏனைய வருமானங்கள்	19,986,738	30,182,345	30,015,334	682,025	15,633,000	24,751,809	24,298,145	18,889,968
மொத்தம்	**48,597,588**	**57,414,558**	**54,866,992**	**4,942,468**	**40,997,108**	**51,615,568**	**56,905,568**	**27,274,526**

2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
மீளாய்வாண்டு ஜனவரி 01 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை வருமானம் ரூபா 27.27 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 57.41	கணக்காய்வு அவதானிப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றன என.	நிலுவை வருமானம் சேகரித்தலின் முன்னேற்றத்தை அதிகரித்துக்கொள்ள வேண்டும்.

மில்லியன் தொகையாக காணப்பட்டது. அதன்படி, ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட ஒட்டுமொத்த வருமானம் ரூபா 84.69 மில்லியன் தொகை எனினும், சேகரிக்கப்பட்ட வருமானம் ரூபா 54.87 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால், வருமானம் சேகரித்தின் முன்னேற்றம் 65 சதவீத மட்டத்தில் காணப்பட்டது.

2.2.3 வீதவரியும் வரியும்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	2236 வீதவரி அலகுகளில் இருந்து பெற வேண்டிய வீதவரி வருமானம் ரூபா 3.48 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், இந்த நிலுவை மீதி 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட மற்றும் 03 வருடங்களுக்கு மிகையான மீதிகள் முறையே ரூபா 1.08 மில்லியன் மற்றும் ரூபா 1.74 மில்லியன் தொகை காணப்பட்டது. இந்த நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 158(1) இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட மற்றும் 03 வருடங்களுக்கு மேற்பட்ட மீதிகளில் ரூபா 609,448 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், சிவப்பு அறிவித்தல் அனுப்புவதன் மூலம் ரூபா 432,689 தொகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது என.	சட்டத்தின் பிரிவு 158(1) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	111 வியாபார அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 286,800 இற்கான வியாபார வரி காணப்பட்டதுடன், அந்த நிலுவை மீதியில் 01 வருடத்திற்கும் 03 இற்கும் இடைப்பட்ட மற்றும் 03 வருடங்களுக்கு மிகையான மீதிகள் முறையே ரூபா 79,200 தொகை மற்றும் ரூபா 121,200 தொகையாக காணப்பட்டது. அந்த வருமானத்தை அறவீடு செய்தல் தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசபைச் சட்டத்தின் பிரிவு 152 இல் குறிப்பிட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் அறவீடு செய்திருக்கவில்லை.	ரூபா 54,000 தொகை அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும், நிலுவை மீதியை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனவும் மற்றும் சில நிறுவனங்கள் காணப்படாமையால் நிலுவை மீதிகள் அறவீடு செய்வதில் சிக்கல் நிலை காணப்படுகின்றது என.	சட்டத்தின் பிரிவு 152 இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(இ)	05 வருடங்களுக்கு முன்னர் இருந்து பெற வேண்டிய களியாட்ட வரி வருமானம் ரூபா 295,940 தொகை அறவீடு செய்திருக்கவில்லை.	அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.4 வாடகை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 95 கடையறைகளில் இருந்து பெற வேண்டிய கடை வாடகை ரூபா 4.58 மில்லியன் தொகையினை அறவீடு செய்தவதற்காக பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், நிலுவை மீதியில் 03 வருடங்களுக்கு மிகையான ரூபா 1.62 மில்லியன் தொகையும் காணப்பட்டது.	ரூபா 1.04 மில்லியன் அறவீடு செய்யப்பட்டுள்ளது எனவும், மீதியான நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் மற்றும் ரூபா 1.62 மில்லியன் தொகையினை பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	சட்டத்தின் பிரிவு 159(1) இன் பிரகாரம் நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.
(ஆ)	கிரிந்த புனித நகருக்கு அண்மையில் சபைக்குச் சொந்தமான வாடகை வருமானம் அறவிடப்படுகின்ற 58 கடை அறைகள் 2023 ஆண்டில் அந்தக் காணியின் உரிமை கிரிந்தை விகாரைக்கு சொந்தமானது என அச் சந்தர்ப்பத்திலே சிட்டையிடல் நிறுத்தப்பட்டிருந்ததுடன், அத் திகதி வரை சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 1.62 மில்லியன் தொகையை அறவீடு செய்திருக்கவில்லை. அதேபோல், இந்தக் காணியுடனான ஆதனங்களின் உரிமை மாற்றங்கள் தொடர்பாக தெளிவாக்கி சிக்கலை சீராக்கிக் கொள்வதற்காக மீளாய்வாண்டு வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	காணியின் உரிமையை சபைக்கு காணப்படாமையால் நிலுவைத் தொகையை அறவீடு செய்ய முடியாதெனவும், அதனால் பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டியதுடன், காணியுடனான ஆதனங்களின் உரிமையை தீர்த்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபைக்குச் சொந்தமான ஆவணப்படுத்தப்பட்டிருந்த திஸ்ஸ பொதுச் சந்தையின் 03 அலகு கடைச் சதுரங்கள், லொத்தர் விற்பனை 03 குடில்கள் நீண்ட காலமாக பௌதீக ரீதியாக காணப்படாத போதிலும், அந்த அலகுகளில் இருந்து அறவிடப்பட வேண்டிய வாடகை என முறையே ரூபா 11,338 தொகை மற்றும் ரூபா 112,620 தொகை கடை வாடகைப் பதிவேட்டில் காட்டப்பட்டிருந்தது.	உள்ளூராட்சி ஆணையாளரிடம் அறவுரை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	கடையறையை பௌதீக ரீதியாக பரிசோதனை மேற்கொண்டு சரியான பதிவேடு தயாரிக்கப்பட வேண்டும்.

(ஈ)	2013 ஆண்டு முதல் பெற வேண்டிய கல்கிரசர் வாடகை ரூபா 443,996 தொகை மற்றும் 2022 ஆண்டு முதல் காணப்படுகின்ற கழிவறைகளை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் பெற வேண்டிய ரூபா 10,178 தொகை அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை.	கல்கிரசர் வாடகை தொகையினை அறவீடு செய்வதற்காக பொறுப்பான உத்தியோகத்தர் காணப்படவில்லை என. மற்றும் ரூபா 10,178 தொகையை பதிவழிப்பதற்காக அனுப்பப்பட்டுள்ளது என.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும்.

2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணங்கள்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2022 மற்றும் 2023 ஆண்டுகள் மூதல் காணப்படுகின்ற பெற வேண்டிய வாகனத் தரிப்பிடக் கட்டணம் ரூபா 108,736 தொகை மீளாய்வாண்டின் போதும் அறவீடு செய்திருக்கவில்லை.	ரூபா 57,853 தொகை பதிவழிப்பதற்கு அனுப்பட்டது எனவும் மற்றும் மீதி நிலுவை அறவீடு செய்வதற்காக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும்.

2.2.6 ஏனைய வருமானங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	சபைக்குச் சொந்தமான வாகனங்களை வாடகைக்கு கொடுப்பதன் மூலம் 03 வருடங்களை மிகைத்த ரூபா 311,400 தொகையும், 14 நிறுவனங்களிலிருந்து பெற வேண்டிய குப்பை அகற்றும் கட்டணம் ரூபா 220,400 தொகை அறவீடு செய்திருக்காததுடன், குப்பை அகற்றும் கட்டணங்களில் ரூபா 138,400 தொகை 2020 ஆண்டு முதல் காணப்படும் மீதியாகும்.	சாக்கடை பவுசர் நிலுவைத் தொகையில் ரூபா 139,755 தொகை மற்றும் குப்பை அகற்றல் கட்டணத்தில் ரூபா 82,000 தொகையும் அறவிடப்பட்டுள்ளதுடன், மீதி நிலுவைத் தொகை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும்.
(ஆ)	மாகாண சபையில் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 29.79 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், ஹம்பாந்தோட்டை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற வேண்டியிருந்த ரூபா 5.08 மில்லியனிற்கான முத்திரைக் கட்டண வருமானம் பல்வேறு சிக்கலான நிலைமைகள் மீது மாகாண வருமானத் திணைக்களத்தினால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததுடன், அது	முத்திரைக் கட்டண நிலுவையில் ரூபா 28.85 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது எனவும் மற்றும் ஹம்பாந்தோட்டை காணிப் பதிவாளர் அலுவலகத்திலிருந்து பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும்.

தொடர்பாக கவனம் செலுத்தி அந்த வருமானத்தை மீண்டும் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 இணங்காணப்பட்ட நட்டங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	திஸ்ஸமஹாராம பிரதேச சபைக்குச் சொந்த உத்தகந்தர சேதனப் பசளை நிலையத்தின் அலுவலகக் கட்டிடம் 2023 நவம்பர் 24 திகதி தீப்பற்றியதனால் 22 வகையான உபகரணங்களை சேர்ந்த 40 வகையான பண்ட அலகுகள் அழிவடைந்திருந்தது. இதன் ஆரம்ப விசாரணை நடாத்துவதற்காக சபையின் இரண்டு பெண் உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் பெண் அலுவலர் ஒருவரும் 2023 நவம்பர் 04 திகதி நியமனம் செய்யப்பட்டிருந்த போதிலும், விசாரணை அலுவல்களுக்குரிய அறிக்கை 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் சபைக்கு வழங்கப்பட்டிருக்காததுடன், நியமனம் செய்யப்பட்டிருந்த விசாரணைக் குழுவிற்கு திடீர் தீப்பற்றல் தொடர்பாக விசாரணை அலுவல்கள் மேற்கொள்வதற்கு தகுதியான விஷேடத்துவ உத்தியோகத்தர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை.	உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவித்து தேவையான அலுவல்கள் மேற்கொள்ளப்படும் எனவும், எதிர் காலத்தில் இவ்வாறான நட்டங்கள் மற்றும் சேதங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் விசாரணைகள் விரைவாக ஆரம்பிக்கப்படும் என.	விசாரணை அலுவல்களுக்காக பொருத்தமான விஷேடத்துவ உத்தியோகத்தர் ஒருவரை ஈடுபடுத்தி அறிக்கையை விரைவாக பெற்றுக்கொண்டு தொடர் நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.
(ஆ)	பல்கரும கட்டிடத்திற்கு அண்மையில் மின்மாற்றியொன்று நிறுவுவதற்கு பொருத்தமான இடமொன்று கண்டறியாமல் 2024 ஜூன் 26 திகதி அங்கீகாரப்பட்ட சங்கம் ஒன்றிற்கு ரூபா 201,690 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்திருந்து. அந்த இடத்தில் பாதியளவில் நிர்மாணித்த பின்னர் சிக்கல் தன்மையொன்று காணப்படுகின்றதென குறிப்பிட்டு	நிர்மாண வேலை ஆரம்பித்து கைவிடப்பட்டிருந்த குடிலை புத்தர் குடிலொன்றாக நவீனமயப்படுத்த முடியுமாக இருப்பதனால் இந்தத் தொகை சபை நிதியத்திற்கு நட்டமொன்று அல்ல என.	கட்டிடங்கள் முறையான திட்டமொன்று நிர்மாண அலுவல்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

	வேறொரு இடத்தில் நிர்மாணிக்கும் அலுவல்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு 2024 ஜுன் 26 திகதிய 37 ஆம் இலக்க உறுதிச் சீட்டின் மூலம் அதே சங்கத்திற்கு ரூபா 429,399 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதன்படி, பாதியளவு நிர்மாணிக்கப்பட்டு கைவிடப்பட்டிருந்த குடிலுக்காக சபை நிதியத்திலிந்து செலுத்தப்பட்டிருந்த ரூபா 201,690 தொகை கவனயீனத்தினால் சபைக்கு ஏற்படுத்தியிருந்த நட்டமொன்றாக காணப்படுகின்றது.		
(இ)	2017, 2021, 2022 மற்றும் 2023 ஆண்டுகளின் போது சபையின் வாகனங்கள் மற்றும் இயந்திர உபகரணங்களுக்காக தேவையான 10 டயர்கள் புதிதாக கொள்வனவு செய்திருந்த மற்றும் 48 டயர்கள் மீள்நிரப்பலுக்காக கூட்டுத்தொகை ரூபா 1.44 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவிலும் அந்த டயர்களை பயன்படுத்தியிருக்கவில்லை. அதன்படி, தேவைப்பாட்டை உரிய முறையில் இனங்காணாமல் டயர்கள் கொள்வதனவு செய்யப்பட்டிருந்தமையால், சபை நிதியம் தேவையற்று செலவிடப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் தேவைப்பாட்டை இனங்கண்டு டயர் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	நிதியம் சிக்கனமாக தேவைப்பாட்டை கவனம் செலுத்தி கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.2 முகாமைத்துவ திறமையின்மை

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதிக் கோவையின் விதி 185 இன் சபையில் இரண்டு சேமிப்புக் கணக்குகளின் மாதாந்த பண இருப்பு ரூபா 54.38 மில்லியன் தொகை மற்றும் ரூபா 21.79 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அந்தப் பணம் நிலையான வைப்பொன்றுடன் முதலீடு செய்து வருமானம் உழைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	நிலையான வைப்பொன்றில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான மிகைப் பணம் ஆக்கபூர்வமான முதலீடு செய்து வருமான உழைப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ஆ)	2023 ஆண்டின் பண்டக் கணிப்பீட்டின் படி சபையின் பல்வேறு அலகுகளுக்கு சொந்தமாக காணப்பட்ட பௌதீக ரீதியாக காணப்படாத 28 வகையான பண்டங்களைச் சேர்ந்த 134 பண்ட அலகுகள், இரண்டு பொது நூலகங்களுக்கு கிடைத்திருந்த ரூபா 196,904 தொகை பெறுமதியான 700 நூலகப் புத்தகங்கள் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 46 நூலகப் புத்தகங்களின் பாற்றாக்குறையொன்று அறிவிக்கப்பட்டிருந்தது. அந்த பற்றாக்குறையான தொகையை பொறுப்பான தரப்பினரிடம் அறவீடு செய்வதற்கு 2024 திசெம்பர் 31 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	பற்றாக்குறை தொடர்பாக கண்டறிந்து தொடர் நடவடிக்கை எடுக்கப்படும் என.	கணிப்பீட்டின் மூலம் இணங் கண்டிருந்த பற்றாக்குறை தொடர்பாக பொறுப்பான உத்தியோத்தர்களிடம் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(இ)	சபையின் மந்திரிமார் இருவரினால் பெற்றுக்கொள்ளப்படாத சபை அமர்வுக் கொடுப்பனவு ரூபா 112,500 தொகை தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு அல்லது எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமல் வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.	சபையின் வருமானத்திற்கு எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகத்திற்கு திருப்பி அனுப்புவதற்கு அல்லது எதிரீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

3.3 விளைவற்ற அல்லது குறைபயன்பாட்டு ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	மாவட்ட செயலகம் ஊடாக ரூபா 62.92 மில்லியன் செலவொன்று மேற்கொள்ளப்பட்டு பன்னேகமுவ பொதுச் சந்தையில் புதிய வர்த்தக கடைத் தொகுதியின் 28 கடை அறைகள் மற்றும் திறந்த கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு 2021 ஆண்டின் பொது சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. கடையறைகளை டென்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு வாடகையாளர் தெரிவு செய்யப்பட்டு ஒரே தடவையில் பெறும் பணமும் அறவீடு செய்யப்பட்ட போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவிலும், 03 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், அந்த	2025 ஆண்டு அபிவிருத்தி அலுவல்கள் பூர்த்தி செய்யப்படும் என.	பன்னேகமுவ புதிய வர்த்தக கடைத் தொகுதியின் கடையறைகள் நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்ட செலவின் மூலம் எதிர் பார்க்கப்பட்ட நலன்களை பெற்றுக்கொள்வதற்காக விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

		கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்து கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. அதன்படி, சபைக்குப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த பாரிய கடை வாடகை பெறுமானம் ஒன்றை இழந்திருந்தது. அதேபோல் கட்டிடம் அமைந்துள்ள காணியில் கொங்கிட் துண்டுக் கற்கள் பதிப்பதற்காக சபையினாலும் ரூபா 1.13 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன், கடையறைகள் மற்றும் வர்த்தக வளாகம் உரிய முறையில் பயன்படுத்தப்படாமை பராமரிக்கப்படாமையினால் இதற்காக செலவிடப்பட்டிருந்த ஒட்டுமொத்த செலவின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொண்டிருக்கவில்லை.		
(ஆ)	(i)	நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் திஸ்ஸமஹாராம பஸ் தரிப்பிடத்திற்கு அண்மையில் அமைந்துள்ள 48 கடையறைகளை கொண்ட தரைமாடியும், பிரதேச சபை அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக முதலாம் மாடியும், கேட்போர் கூடத்திற்காக இரண்டாம் மாடியுடன் திட்டமிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த பல்கரும கட்டிடம் 2019 திசெம்பர் 02 திகதி பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இங்கு 48 கடை அமைந்துள்ள தரை மாடியின் வேலைகள் முழுமையாக பூர்த்தி செய்து ஏனைய இரண்டு மாடிகளில் நிர்மாண வேலைகள் கணிசமான எண்ணிக்கை அளவொன்று பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. 2023 பெப்ரவரி மாதத்தில் டெண்டர் மூலம் 41 கடையறைகளுக்காக வாடகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு ஒரே முறையில் பெறும் பணமாக ரூபா 96.15 மில்லியன் அறவீடு	2025 ஆண்டில் கடையறைகள் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்தில் 48 கடையறைகளுடனான பல்கரும கட்டிடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

	செய்யப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு இறுதியளவில், 05 வருடங்களுக்கு மிகையான காலம் கடந்திருந்த போதிலும், இந்தக் கடையறைகளை பெறுமதி மதிப்பீடு செய்து கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை மேற்கொண்டு ஒப்படைக்க நடவடிக்கை எடுத்திருக்காமையால் சபைக்கு கிடைக்க வேண்டியிருந்த வருமானம் ஒன்று தவிர்க்கப்பட்டிருந்தது.		
(ii)	மீண்டும் டெண்டர் அழைக்கப்பட்டு வாடகைக்கு கொடுப்பதற்கு உத்தேசித்துள்ள 07 கடையறைகள் மீளாய்வாண்டு இறுதியளவிலும் டெண்டர் மூலம் வாடகைக்கு கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்காமையால் சபைக்குப் பெற்றுகொள்ளக்கூடியதாக இருந்த ரூபா 11.71 மில்லியனிற்கான ஒரே தடவையில் பெறும் பணத்தினை இழந்திருந்தது.	ஒரே தடவையில் பெறும் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்தில் 48 கடையறைகளுடனான பல்கரும கட்டிடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.
(iii)	கடையறைக்கள் டெண்டர் மூலம் ரூபா 96.15 மில்லியன் தொகை ஒரே தடவையில் பெறும் பணம் கிடைத்திருந்த போதிலும், இந்தக் கட்டிடத்தின் குறைபாடுகளை சரி செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடைபெற்றிருக்காமையால் ஒழுங்கின்றி போதிய இடவசதியின்றி பேணிச் செல்லப்படுகின்ற பொது மக்களுக்காக சேவை வழங்கும் பிரதேச சபை அலுவலகம் இந்த இடத்திற்கு எடுத்துவர முடியாமல் உள்ளது.	கடையறைகளை திறந்து விரைவாக அலுவகத்தை கொண்ட இரண்டாம் மாடியின் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்படுகின்றன என.	திஸ்ஸமஹாராம பஸ் நிலையத்தில் 48 கடையறைகளுடனான பல்கரும கட்டிடத்திற்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபைக்குச் சொந்தமான டிபர் வண்டி 2018 ஆண்டு திருத்த வேலைகளுக்காக அனுப்பப்பட்டிருந்த போதிலும், 2024 திசெம்பர் 31 திகதி அளவில் இந்த டிபர் வண்டியின் திருத்த வேலைகள் மேற்கொள்ளாமல் கராஜில் காணப்பட்டதுடன், இந்த கராஜ் தற்போது மூடப்பட்டுள்ளது. அதன்படி, முறையாக தேடிப்பார்க்காமல் 06 வருடங்களுக்கு மிகையான காலம் முதல் டிபர் வண்டி கராஜில் காணப்படுகின்றதெனவும் அதனை முன்னர் இருந்த நிலைமையில் பெற்றுக்கொள்வதற்காக தேவையான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.	குறிப்பிட்ட மதிப்பீட்டின் படி திருத்த வேலைகள் மேற்கொண்டு டிபர் வண்டியை சபைக்கு எடுத்துவர நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபைக்குச் சொந்தமான டிபர் வண்டியின் பாதுகாப்பை உறுதிப்படுத்தி விரைவாக திருத்த வேலை மேற்கொண்டு சபைக்கு பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.5 ஒப்பந்த நிறுவாகம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையினால் நிர்மாணிக்கப்பட்டிருந்த இரண்டு பாதைகளுக்காக கொங்கிரீட் துண்டுக் கற்கள் 20 கிலோ மீற்றர் தூரத்திலிருந்து எடுத்து வரப்பட்டதென குறிப்பிடப்பட்டு ஒரு கிலோமீற்றருக்காக ரூபா 274.41 வீதம் ஒப்பந்தச் சங்கத்திற்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்த போதிலும், கொங்கீரீட் துண்டுக் கற்கள் கொள்வனவு செய்ததை உறுதிப்படுத்துவதற்காக பில் பத்திரங்கள் அல்லது வேறேதும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆவணம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்காத போதிலும், போக்குவரத்துக் கட்டணம் ஒன்றென ரூபா 60,920 தொகை செலுத்தப்பட்டிருந்தது.	பில்பத்திரங்கள் மற்றும் ஆவணங்கள் பின்னர் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது என.	நிர்மாண வேலைகளுக்குரிய பில் பத்திரங்கள், கொடுப்பனவு செய்வதற்கு முன்னர் பெற்றுக்கொள்ள வேண்டும்.

3.6 மனித வள முகாமைத்துவம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
சபையின் 12 பதவிகளுக்குரிய 24 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அதனை முறைப்படுத்துவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் பதவிகளை முறைப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	சபையின் பதவி தேவைப்பாடு தொடர்பாக முறையான மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட வேண்டும்.

4 கணக்களிப் பொறுப்பும் நல்லாளுகையும்

4.1 வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம்

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2024 ஆண்டிற்காக வருடாந்த பாதீட்டின் படி நலனோம்பு சேவை வசதிகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விளையாட்டுத் திடல்கள்/ மயானங்களை தீர்த்தல் மற்றும் திருத்த வேலைகள் மேற்கொள்வதற்காக ரூபா ஒரு மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டின் போது அந்த அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.	எதிர் காலத்தில் பாதீட்டின் படி அபிவிருத்திச் செயற்திட்டங்கள் நிறைவேற்றப்படும் என.	பாதீடு செய்யப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

	கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
(அ)	04 வருமான விடயங்களில் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 54.82 மில்லியனாக காணப்பட்டதுடன், அது 17 சதவீதம் முதல் 60 சதவீதமான வீச்சில் காணப்பட்டது.	தத்துரூபமாக மதிப்பீடுகள் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைப்பதற்கும், திட்டமிடலை முறைப்படுத்துவதற்கும், வருமானம் சேகரித்தலை செயற்திறனுடன் மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.
(ஆ)	மீளாய்வாண்டின் போது 37 செலவு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை 5.05 மில்லியனிற்கான மொத்த ஏற்பாடுகளும் சேமிக்கப்பட்டிருந்தது.	எதிர் காலத்தில் பாதீடு மற்றும் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட கருமங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என.	முரண்களை குறைத்துக்கொள்ள வேண்டிதுடன், அதற்காக திட்டமிடலை முறைப்படுத்த வேண்டும்.

4.3 நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

கணக்காய்வு அவதானிப்பு	சபையின் கருத்துரை	பரிந்துரை
2018 ஏப்ரல் 23 திகதிய விலேபொது/2018/61 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நிலைபேறான அபிவிருத்திக் குறிக்கோள் மற்றும் இலக்கை நெருங்குதல் (நெருங்கிய சுட்டிகள்) பரிசோதனையின் போது 04 குறிக்கோள்களின் கீழ் 06 இலக்குகளை நெருங்குதல் 07 சுட்டிகளின் முன்னேற்றம் எண்ணிக்கை ரீதியாக காட்டப்பட்டிருக்கவில்லை.	சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படும் படி அறிவுரை வழங்கப்பட்டது என.	குறிப்பிட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் முன்னேற்றம் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.